உ

சிவமயம்.

ஸ்ரீலஸ்ரீ திருப்பதி சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

ஸ்ரீ வித்யா கீதை.

இப்புத்தகங்கள்
மேற்படி சுவாமிகளின் மண்டலாபிஷேகத்தின் ஞாபகார்த்தமாக, ஈஸ்வர ஆண்டு மார்கழித்திங்கள்
14 தேதியில் கருவூர் கிருஷ்ணநிட்டிங்
பாக்டரி, சி. கிருஷ்ணசாமி நாயுடு
அவர்களால் நன்கொடையாக
வழங்கப்பட்டன.

கரூர் பிரிட்டிஷ் இந்தியா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1937

உ

சிவமயம்.

ஸ்ரீலஸ்ரீ திருப்பதி சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

ஸ்ரீ வித்யா கீதை.

இப்புத்தகங்கள்

ஷை சுவாமிகளின் மண்டலாபிஷேகத்தின் ஞாப
கார்த்தமாக, ஈஸ்வர ஆண்டு மார்கழித்திங்கள்
14 தேதியில் கரூர் கிருஷ்ணநிட்டிங்
பாக்டரி, சி. கிருஷ்ணசாமி நாயுடு
அவர்களால் நன்கொடையாக
வழங்கப்பட்டன.

கரூர் பிரிட்டிஷ் இந்தியா பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது.

1937

முகவுரை.

சிவரகஸ்யத்தின் உத்தரபாகத்துள்ளதும், ஸ்ரீ தத்தாத்ரேயர் ஜமதக்னி புதல்வரான பரசுராமருக்கு உபதேசித்தருளியதுமாகிய ஸ்ரீ திரிபுராரகஸ்யம் ஐந்தாம் அம்சமான ஞானகாண்டத்தில் இருபதாவது அத்தியாயமாகிய இந்த ஸ்ரீ வித்தியா கீதை, ஸ்ரீ வித்தியா தேவியினாலேயே பிரதிபாதிக்கப்பட்டிருப்பதால், திலகம்போன்று சிரேஷ்டமாயுள்ளது. ஸம்ஸார அந்தகார சமுத்திரத்தில் மூழ்கியிருப்பவர்களை உத்தாரணஞ்செய்ய இது ஓர் தாரகமாகும். தினந்தோறும் இதனைப் படித்தால் அத்தேவி பிரசன்னமாகித் தானே சுயமான ஞானத்தை அளிப்பாளென்று இக்கீதையிற் சொல்லப் பட்டிருக்கிறது. ஆதலால் யாவரும் பாராயணஞ் செய்யும் நிமித்தம் இதனை முன் அச்சியற்றி ரிஜிஸ்ட்டர் செய்திருந்த தஞ்சாவூர் மகா-ா-ா-ஸ்ரீ வி. சேஷாத்திரி ஐயரவர்கள் இந்நூலை அச்சியற்றிக்கொள்ளும்படி மனப்பூர்வமாக உதவிய பேருதவிக்கு என்னென்றும் நன்றிபாராட்டக் கடமைப் பட்டவனாக இருக்கின்றேன்.

சி. கிருஷ்ணசாமி நாயுடு,

கரூவூர்.

THE
KRISHNA KNITTING

[illegible]

500	1	[illegible]	- 25
100	2	ய	- 100
500	3	[illegible]	- 100
605		ட	- 100
100	4	[illegible]	- 125
	5	[illegible]	- 100
		[illegible]	- 25
		உ	- 25
			05

25
100
100
100
125
100
25
25

75

3 – 25

– 1 68

5 – 1 25

2 – 1 25

9 – 1 25

– 1 25

625

துதிகவிகள்.

சென்னை வேலாயுத சுவாமிகள் இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

பொன்மேரு கிரிவலஞ்செய் பசும்புரவி யிரவியெனப்
பொருந்து மன்பர்
வன்மாய விருளகற்று மறைமுடி.வி னிலவுபொருள்
விளக்கங் காட்டி
சொன்மாரு வித்தியகீ தையையருளி சுகபரிபூ
ரணசொ ரூப
சின்மயமா நிலையமர்ந்த திருப்பதியெம் மடிகடிரு
வடிகள் போற்றி.

ஷை

நனியன்பாய் நல்லோரை யுபசரிக்கு நாட்டமுளோன்
ஞான முள்ளோன்
பனியன்பாக் டரிகிருஷ்ண சாமிநா யுடுமுதலோர்
பணிவோர்க் கெல்லாம்
தனியன்பா லன்பரிடர் தனையகற்ற சற்குருவாய்த்
தலைமை பெற்று
கனியன்பே வடிவான திருப்பதியெம் மடிகளடிக்
கமலம் போற்றி.

நடேசர்

என்னெஞ் சருக விரத்தினசபாபதியே
பொன்னம் பலவா புரிசடையோய்—தென்முகநின்
றானந்த நிர்த்தனஞ்செய் யற்புதனே நின்கருணைத்
தானஞ்செய் குஞ்சிதபா தா.

சிவகாமசுந்தரி.

எல்லாமா யல்லதுவா மின்ப நடனத்தின்
வல்லான் சமீபசன் மகிழ்வாமி—தில்லைச்
சிவகாம சுந்தரிமா தேவிபரா சத்தி
நவமா மலர்த்தாளுண் ணுடு.

விநாயகர்.

துதிக்கையா யன்பரெலாஞ் சூழத் துவிதத்
துதிக்கையாய் பத்தாத் தொகையோர்—துதிக்கையர்
விக்கினே சாநல் விநாயகநின் றாள்சரண்சே
விக்கினே சாற்றிடுதே வே.

சுப்பிரமணியர்.

துங்கா விசாகா சுகாசண் முகாகுழகா
பங்கா முருகாமின் பாகாதண்—கங்கா
சுதாதிகழ்கந் தாமெய்ச் சுகந்தாநற் சேந்தா
சுதாசிவமைந் தாசம்பந் தா.

கடவுள் வாழ்த்து.

திருமால்.

முகுந்தாகோ விந்தாதா மோதரவை குந்தா
நகுந்தாமா சச்சிதா நந்தா—மிகுந்தா
மிடையூ றகற்றியினி தேழையேன் றன்னைக்
கடைபோகக் காத்தருள்கண் டாய்

அனுமார்.

இனுமந்த மாருதம்போன் றேய்ந்தே யிராமா
வெனுமந்த நாதமகிழ்ந் தேற்போய்—அனுமந்தா
மாருதியே பத்தி மணியொன்பான் பூண்டோய்நின்
சீருதிக்குந் தாளென் சிரம்.

சரஸ்வதி.

வெண்கமலத் தாளெவெண் மேனியாய் வெண்கலையாய்
வெண்கதிர்ப்பூண்வெண்மலர்த்தார் வேய்ந்தொளிர்வாய்—
[வெண்பரமை
வெண்சசிகோ டிக்கிணையோய் வெண்பளிங்கொத் தேற்கரு-
வெண்குணத்தை வெண்மையொழி வித்து. [ளா

ஆளுடையபிள்ளையார்.

பெருவாழ்வி னாளுடைய பிள்ளையார் வண்மைத்
திருஞான சம்பந்தர் சீரார்—முருகோன்
அவதாரத் தெந்தை யடிமலரை நெஞ்சின்
நவைதீரச் சிந்திப்போ நாம்.

ஆளுடையரசு.

அப்பர் திரு நாவுக் கரைய ரிராவணற்குத்
துப்பருளும் வாகீசத் தொன்முனிவர்—செப்பு திருத்
தாண்டகத்தின் வைப்புத் தனியா ளுடையரசை
வேண்டமதிச் சுட்டொழியு மேல்.

ஆளுடைய நம்பி.

ஆரூர னுவலூ ரான்சேர மான்றுணைவன்
ஞாரூர் புயச்சுந் தரமூர்த்தி—சீரூரும்
ஆளுடைய நம்பியெம்பி ரான்றேழன் வன்றெண்டன்
ஞாளுடையார் சிந்தையிலர் தாம்.

ஆளுடையடிகள்.

செழுநீர்மை ஞானச் சிவானந்தச் செல்வா
பொழில்வாத வூரடிகள் பூன்ற—னெழுதமகிழ்
மாணிக்க வாசகர்பொன் மன்றடைந்தார் தாண்மலர்க்கே
காணிக்கை யென்னதகங் காண்.

சற்குரு.

வாமனனு வுற்றுமுன மாவலிபாற் பேருருவாய்த்
தாமடக்கிக் கொண்டவகை சார்நரனுப் —பூமிசைவந்
தொன்பிரம மாய்த்தனைச்சார்ந் தோரைத்தா னுக்கியருள்
வன்குருபா தம்வணங்கு வாம்.

ஞானிகணிலையைநன்கே நவில்கெனப்பரசுராமன்
ஊனமிலுளத்தராக வுயர்தவத்தத்தாத்ரேய
ரானவச்குரவன்பாத மன்பொடுபணிந்து கேட்ப
மேனிலைவிடயமொன்று விளம்புவர்நடந்தவாறே.

அதிரகசியமதாக வமைவிசாரணையைமுன்னிட்
டதிகமாமான்மஞான மடைந்துலகுய்யவேண்டி
அதிபரிசுத்தமாக வமர்ந்தசத்தியலோகத்தின்
அதிபனுமயன்சபைக்கண் ணுயதோர்பிரசங்கந்தான்.

சனகராதியர்வசிட்டர் தகுபுலஸ்தியர்வியாசர்
சினமறுபுலகர்வாம தேவர்கௌதமர்ஸுமந்து
கனபிரசேதர்சங்கர் கண்வர்காசிபரேதக்ஷர்
வினவுதேவலர்நல்விஸ்வா மித்திரர்பிருகுபின்னும்.

பராசரர்சுகரேமிக்க பண்பினத்திரியினோடு
விராவுமாங்கிரசப்பேர் மெய்யர்நாரதரேமைய
லிராதொழிசியவனச்சீ ரிருடியேலிகிதர்மற்றும்
பிராமணோத்தமர்பல்லோரப் பிரமசத்திரத்தின்மேவி.

நிதியெனநிரூபணங்க ணிசழ்த்தியநேர்மைகொண்டே
அதிகநுட்பமதாயாங்கே யமைபொருண்முற்றுநன்கு
முதிர்விசாரணைசெய்காலே முனிவரர்யாருமந்தச்
சதுமுகன்றன்னைநோக்கிச் சாற்றினரிவ்வாறுக.

ஸ்ரீ வித்தியா கீதை.

தனைவேதநான்கும் நவின்றநான்முகவயாங்கள்
பிதாமார்ஞானத்தாலே புகல்பராவரரேயாவோம்
பதமாங்கன்மத்தாலாம் பிராரத்தப்பிரிவினாலே
தலில்வித்தியாசம் மேவுவமெவ்வாறென்னின்.

லர்விவகரித்திருப்போம் சிலரதைவிடுத்துவப்போம்
லர்சமாதிக்கணைய்வோம் சிலர்விசாரணையினிற்போம்
லர்பரபத்திசெய்வோம் சிலர்கருமத்தினேர்வோம்
லர்வெளிநோக்கத்தோடு திரிநரர்போலுமுள்ளோம்.

வ்விதம்பலவாறான வியல்புவாய்ந்துள்ளயாங்க
ளாவ்வொருவருந்தம்பட்ச முயர்வெனவுள்ளத்துன்னி
புவ்வவர்நிலையேமேலென் றறிகுவமதனால்யாரே
வவ்வியற்சிரேட்டரென்னத் தாயனையருள்வைநீயே.

னிகள் தம்மொழியைக்கேட்ட மூதுணர்வேதன்றானும்
னிதிகழுண்மைதன்னை நாமெடுத்துரைத்தபோதுந்
னுமயலாலிவர்க்குத் துலங்கிடாதெனத்தன்னுள்ளே
னியவருளத்துக்கேற்ப வுத்தரமுரைக்கலுற்றான்.

னுமிவ்விடம்நம்போ லறிந்துளேன்முனிகாளையங்
னுமோர்சிறிதுமின்றித் தகைகொள்சர்வஞ்ஞனை
னிடங்கொண்டுவந்த மாபரசிவனையோர்வன்
னவிவ்வுண்மைதன்னை யவனிடமணுகிக்கேட்போம்.

எனமறமொழிநவின்றங் கெய்தியமுனிவரோடும்
மனமகிழ்வெய்திவாழு மாதவனோடுஞ்சென்று
சனமுறுகைலைமேய சருணைவாரிதியைக்கண்டு
வினவினனதனையந்த வேதனும்விநயத்தோடே.

போதுளோனுளக்குறிப்பைப் புரிசடையோனுமோர்ந்து
மீதிகழுண்மைதன்னை விளம்பினுமிவர்கள்தாமும்
ஓதுறுசிரத்தையில்லா வுளத்தினுலுணரார்மற்றை
யாதியான்மொழிந்தபோது மதனையென்பட்சமென்பர்.

ஆனதாலிவர்கண்மாட்டென் னருமொழியாவும்பொய்த்தே
யீனமாமென்றுமீதை யிவர்க்கியம்பிடுதலாலே
தானிகழ்பயனின்றென்றுந் தன்னகங்கருதிக்கூறும்
யானிதனுண்மைதன்னை யறிந்தவனல்லனன்றே.

ஆகையால்வித்தையென்னு மப்பராசத்திதன்னை
ஓகையாம்வகையினுமு முருகியேதியானஞ்செய்யின்
மோகமதழியவுண்மை மொழிகுவளிதயத்தேய்சந்
தேகமுமகலப்பெற்றுத் தெருளினையடைகுவோமால்.

இவ்வணமிசைக்கக்கேட்ட விருடிகளெல்லோருந்தா
முய்வணமகேசியுஞ்சீ ருயர்திரிபுரையுஞ்சித்தே
மெய்வணமாயுங்கொண்ட வித்தியாதேவிதன்னைச்
செய்வணமிழுந்தோராகித் தியானமேபுரிவாரானார்.

வேதன்மால்சிவனோடந்த வியன்முனிவர் துதிப்பப்
போதவாகாயமாகப் பொருந்துறுபுனிதைதானும்
வதமிலெழிலியோசை யென்னுமாறிலகுமேலாம்
நாதரூபிணியாய்விண்ணி னலமுறத்தோன்றிச்சொல்வாள்

இருடிகாளெனையுள்ளங்கொண் டின்றெனைத்துதித்திரந்தப்
பொருடனைப்புகலுமென்னைப் பொலிவுறத்தியானிப்போர்-
கருடவிர்ந்துய்யுமாற்றைக் கடிதினிலுறுவரந்தப் [கள்
புருடராலெய்தலாகாப் பொருளொருசிறிதுமுண்டோ.

வாணியின்மொழியைக்கேட்டம் மாமுனிவரெல்லோருஞ்
சேணுயர்பிரமன்முன்னுந் தேவரும்வணங்கியேத்திக்
காணியவருமெமக்குக் கருணைபாலிப்பாயென்றே
ஆணையாய்ச்சிவத்தின்மேவு மப்பரைதனைத்துதித்தார்.

தன்னுளேயாவுமுன்னந் தந்தவைநிலைக்கச்செய்து
பின்னவைவிலயமாகப் பிறங்கியதன்னுட்கொண்டே
அன்னையாயிலகிமிக்க வருள்சுரந்தடியார்யார்க்கும்
மன்னியதன்னைநல்கி வயங்குவோய்வாழ்கநீயே.

படர்தருசன்மமில்லாப் பான்மையாற்பழையையாவை
தொடர்நரைதிரையுமின்றித் துலங்கலாற்புதியையாவை
அடர்தருமெவைக்குமூல மாதலாலனைத்துமாவை
கடமுறுமண்ணினீயே கவின்சர்வசாரமாவாய்.

எவையுநன் சரித லாலே யியல்சரு வஞ்ஞை நீயே
தவறுரு விஸ்வா கந்தைச் சர்வஹர் ஷிணியு நீயே
நவைபர தந்தி ரந்திர் நற்சுதந் திரையு நீயே
சிவைதிரி புரைப வானி திகழ்கவெந் நாளு நீயே. (21)

விரவுறு பொருள்கள் யாவும் விளக்குறு தன்மை தானாய்
நிருவிசே டமதா யொன்றாய் நிகழ்தலா லெவையு மன்று
சருதுசர் வஞ்ஞை யன்று கவின்சர்வ சார மன்று
சருவஹர் ஷிணியு மன்று சார்சுதந் திரையு மன்றே.

இன்னதென் றுணர வொண்ணு வியல்பினை யியைப் பெற்று
மன்னியே திகழுந் தேவி மாமகே சானி ஞான
வன்னியே நினக்கி யாங்கள் வந்தனம் புரிந்தோம் முன்னும்
பின்னேடு கீழு மேலும் பிறங்குமெய் பாரி சத்தும்.

உன்பர வடிவம் யாதோ உன்னைதைஸ் வரியம் யாதே
நின்பர ஞானம் யாதே நிகழ்பல னதற்கி யாதே
முன்புறு சாத னந்தான் முக்கிய மாக யாதாம்
அன்புறு மதற்கும் யாதே யாகிய சாத கந்தான்.

புகழ்பர ஞானத் தாலே பொருந்துறு சித்தி யாது
நிகழ்வுறு சித்தி சென்று நிலைத்திடு நிலையம் யாது
திகழ்தரு சித்தர் தம்முட் சிறப்பினை யெய்து வாரார்
மகிழ்பெறு மாறெவ் வொன்றும் வகுத்துரை செய்வா யம்மா.

இன்னண முரைப்பக் கேட்ட வெழின்மகா வித்தை யான
அன்னை தான் கருணை யுற்றே யகமகிழ் வெய்தி நோக்கித்
தன்னையே சரண டைந்த தவமுனி வரர்த மக்கு
மன்னுறு மதுர வாக்கான் மறுமொழி நவில்வ தானாள். (26)

ஆகம மென்னு மந்த வம்புதி தனைக்க டைந்துள்
ளாகநன் கமையப் பெற்ற வமிழ்தினை யெடுத்துங் கட்கே
வகலில் கலக்கம் நீங்க வீகுவன் சார மோர்ந்தவ்
வைகம தாகி நிற்கு மியல்பினை யெய்தி வாழ்வீர்.

இலங்குகண் ணாடி யின்க ணியல்பதி விம்பம் போன்றிவ்
வுலகமெல் லாமெ தன்க ணுற்பவ மாய தன்பின்
நிலைபெற விளக்க மாக நின்றுபி னெதனி டத்தே
விலயமா யெவர்க்கும் மிங்கே விளங்கியே தோன்று நிற்கும்.

எந்தவொன் றுணரார்க் கஃதே யெதிருமிவ் வுலக மாகி
விந்தையாத் தோன்று மெந்த விகர்பிலா யோகி யுள்ளத்
தந்தமற் றுன்மா வாக அலையிலம் புதிபோ லாகி
நந்தல்தீர் நிலை விளக்காய் நலமுற வொளிரா நிற்கும்.

தாவிலாச் சித்த சுத்தித் தகைமையா லிருமை யற்ற
வோவலி னிலையை யன்ப ருணர்ந்துமோர் கபட மின்றிப்
பாவனை செய்து வேறுப்ப் படியிலத் யந்த மாகச்
சேவைசெய் தெந்த வொன்றைத் தியானிப்பர் பரிவி னோடே

கண்ணோடுட் காணமாதி கட்குளாய்ப் பிராண சூத்ர
வண்ணமா மெதுயா தொன்று வயங்கிடா விடிலொன்
றேனும்
நண்ணுரு தொழியும் வேதம் நனிகுறிப் பிடும்யா தொன்றை
எண்ணரு மதுவே பான வியல்பினென் பரசொ ரூபம். (31)

புகல்பிர மாண்டங் கட்கூப் புறம்பிலே யூர்த்து வத்தின்
நிகழ்சுதா சமுத்தி ரத்தே நிலவுறு மணித்தீ பத்தில்
மிகுகடம் பாரண் யத்துள் விளங்குசிந் தாம ணிப்பேர்த்
தகுவிசே டமதா யோங்குந் தனிப்பெரு விடுதியின் பால்.

பஞ்சகிர்த் தியந டாத்தும் பண்ணவர் மஞ்ச மாகச்
செஞ்செவே யதன்மே லுற்றுத் திரிபுர சுந்த ரிப்பேர்
விஞ்சைமெய் வடிவ ளுதி மிதுனமா யமர்ந்தி ருத்தல்
கொஞ்சுமென் னபர ரூபக் குறியென வறிமி னீரே.

ஆசிலாப் பிரம னுதி ஐவரே கணேசன் கந்தன்
பேசுபொன் மகளே முன்னுப் பிறங்குபல் சத்தி தாமும்
பாசமி லமரர் திக்குப் பாலகர் வசுக்கள் மற்றும்
பூசனைக் குரியர் யாரும் பொலிவரிவ் வடிவ மாக.

இவ்விதம் யானே யெங்கு மிருந்திடு மியல்பை முற்றுஞ்
செவ்விதி னுணரார் மாயைச் செறிவினுன் மோக முற்றோர்
எவ்வொரு வடிவாப் பூசை யியற்றினு மதனை யானே
அவ்வொரு வடிவா யேற்றங் கருள்புரி குவனு லென்றும்.

பூசனைக் குரிய ளாகும் புனிதையு நானே மேலாம்
ஆசிலாப் பயனை நல்கி யருள்செயு மென்னை யன்றிக்
காசினி யதனின் வேறோர் கடவுள ரிலைத்தாஞ் செய்த
மாசில்பா வனையை யொத்தே மருவுவர் பலனை யன்பர் (36)

இருடிகா ளெனதைஸ் வரியம் என்றுமே யபரிச் சின்னம்
வெருவொழித் தேக பாக விளங்குசித் துருவாம் யானே
கருமுபா தான மொன்றுஞ் சற்றுமே வேண்டி டாமல்
மருவுறு மகில லோக வடிவமா யிலங்கு வேனால்.

இவ்வித மாக யானே யிலங்கியு மெனது சித்தாஞ்
செவ்விய வடிவை யென்றுஞ் சிறிதுமே யிழக்கி லேனால்
துவ்வுறு பொருள்கள் யாவுந் தூர்க்கட மாகச் செய்தும்
ஒவ்விலா திருமை யற்றே ஒளிர்தலே யெனதைஸ் வரியம்.

நித்திய மாகி யெங்கும் நிலவியே யென்னைப் பற்றும்
எத்திலும் பற்றிலாம லிலகுகே வலையு மாகிச்
சத்தியம் போலத் தோற்றுஞ் சகத்தினு தார மாகுஞ்
சுத்தையா மென்னை யோர்மின் சூக்கும திருட்டி யாலே.

நித்திய முத்தை யாக நிகழ்ந்தும்நான் பின்னும் பின்னும்
முத்தியைப் பெறுவ னீங்கே முற்றுணர் குரவன் பாதம்
பத்தியே சீட னாக நண்ணியு மெனது மாயைச்
சத்தியா லனாதி நாளாய்த் தனையறி யாது நிற்பேன்.

இச்சகத் தின்கண் மேவு மெவ்விவ காரந் தானும்
மிச்சையென் றுணரா வண்ணம் விசித்திர மாகி யென்றும்
அச்சென வனுதி யோடு மனந்தமாய் விளங்க ளேயென்
சொச்சமா மைஸ்வர் யத்தின் சுருக்கமீ துணர்ந்து கொண்
மின். (41)

தன்னிய வைரத் தின்கண் துலங்குநீ ரோட்டம் போலும்
மன்னுறு ஞெகிழி யின்கண் வருமனற் கீற்றைப் போலும்
அன்னிய மாகத் தோற்று மகிலமோ கங்க ணன்றே
என்னிலே வாதை யின்றி யிலகமே யெனதைஸ் வர்யம்.

உண்மையி னில்லா தாகு முலகினை யென்னில் யானே
வண்மையாத் திகழச் செய்யு மாண்மையா யிரநா வுற்ற
தண்மையில் சேடனுஞ் சற்றுமே யுரைக்க வொண்ணு
பண்மையென் னீசித் தன்மைப் பரம்பரை யிவ்வா றுமே.

என்னுடை ஞானந் தொய்த மிலகுமத் தொய்த மென்று
பன்னுறு பேதத் தாலும் பரத்தினே டபர மென்ன
மின்னுறு பலவா றுன வேறுபா டவைக ளாலும்
மன்னுறும் பலன்கள் தாமும் வருமவைக் கேற்ற வாறே.

இரண்டெனுந் தன்மை பற்றி யிலகலாற் றுவித ஞானந்
திரண்டிடும் பலவா றுகத் திகழ்துமத் தியானந் தானும்
முரண்படு கனவை யொத்தே முந்துறு மேனு மீசன்
அரண்பெறு நியதி தன்னு லாம்பய னளித்தே தீரும்.

என்னுடை அபர ஞான மிவ்விதம் பலவா மேனும்
மின்னிடு மெனத னுதி மிதுனசுந் தரரூ பத்தை
உன்னியே தியானஞ் செய்த வுத்தம மேனன் பீரேல்
மன்னுறு நிலையை யெய்த வழிபிறி தின்மை யாலே. (46)

சாதன மெவற்றி னுள்ளுஞ் சகுணமூர்த் தியின்றி யானம்
தீதறு பலனை நல்குந் திகழ்பரம் பரையே யாக
ஏதமில் பரவிஞ் ஞான மெய்துதற் கிதுவே மார்க்கம்
ஆதலா லெனையே நீடித் தன்பர்க ளாரா திப்பர்.

வித்தியா தேவியாயும் விமலையாச் சிரேஷ்டை யாயும்
மெத்துமென் றியானந் தன்னுன் மேவுவ தன்றி மேலாம்
அத்துவி தச்சீர் ஞான மமைவுறு தாத லாலே
எத்தினு முயர்வை யெய்து மென்னுடைத் தியான மென்றும்

துவிதமாந் திரிசி யத்தின் றோற்றமோர் சிறிது மின்றி
அவிர்தரு மனவச் சின்னை யாய்த்தனிற் பிறிதொன் றில்லாச்
சிவமெய்க்கே வலையு மாகிச் சித்துரு வாகு மென்றன்
நவமுறு சொரூபந் தானே நல்லவத் துவித ஞானம்.

அசத்திய மெனவ றிந்தே அகற்றிடப் படுஞே யத்தின்
வசத்துறு திலகுஞ் சுத்த மனத்தப ரோட்ச மாக
நிசத்துறு மநுபோ கந்தான் நிகழுமத் துவித ஞானம்
சுசத்ததே சுத்தி ருந்துங் கவின்பெறு நிலைய மீதே.

ஈதெனச் சுட்டிக் காணு மெவையுமோர் சிறிது மின்றி
மீதியா யொளிரான் மாவின் மிகப்பரி சுத்த மாக
வாதனை தீர்ம னந்தான் மருவியே யொன்று பட்டு
நீதியாய் நிகழ்ச மாதி நிருவிகற் பகமே யாகும். (51)

இந்தநன் னிருவி கற்பத் தியல்பினை யியம்புங் காலை
விந்தையாந் திரிசி யத்தின் விமுகனா யிருந்தே னென்றும்
அந்தநல் லான்மா வின்க ணபிமுக மானே னென்றும்
உந்துறு நினைவி ரண்டு மொருவிநின் றிடுத லேயாம்.

தகவுள நிருவி கற்ப சமாதிநின் றெழுந்த பின்னர்
சுககன வடிவாய்ச் சித்தாய்த் துலங்கிய வத்துத் தன்னைத்
திகழ்வுற 'அதுநான்' என்னத் திரும்பநன் குணருங் காலை
நிகழ்வுறு மகண்டா காரம் நிமலமாம் பரவிஞ் ஞானம்.

நற்சிர வணத்தி னாலும் நண்ணிய யூகத் தாலும்
சிற்பொரு ளொன்றே யிந்தத் தேகத்தின் வேறா மென்னும்
பொற்புமித் தேக நானேன் புந்தியை விடுத லானும்
வற்புறு பரோட்ச மாக வயங்குத லபர ஞானம்.

தருப்பணத் துன்மை தேரிற் சார்பதி விம்பம் பொய்யாத்
தருப்பணந் தனில்வே றாகா ததுகிரி சியங்கள் சுற்றே
இருப்பதாய்த் தோற்று மேனும் எந்தநன் ஞானத் தாலே
இருப்பிலா ததுபோ லாமோ எழிற்பர ஞான மஃதே.

எந்தவோர் விஞ்ஞா னத்தா லெங்குமே யெக்கா லத்துஞ்
சிந்தையி லறியா தாகச் செறிபொரு ளொன்றின் றாமோ
அந்தவத் துவித ஞான மமைபரிச் சின்ன மாக
முந்துவிஞ் ஞானங் கட்கு மூலமா மான்ம பூதம். (56)

பிரதிபிம் பங்க ளாலே பிறழ்பரி ச்சின்ன மாகப்
பரவுகண் ணடி யப்ஸம் பலவகை கட்கு மூலம்
பெரியகண் ணடி யேபோற் பெயர்பரி ச்சின்ன ஞானத்
திரளினைத் திற்கு மூலம் சிறந்தவத் துவித ஞானம்.

எந்தவோர் விஞ்ஞா னத்தா லிதயத்தே நீண்ட காலந்
தொந்தகா ரணமா யுற்றுத் தொடர்ந்தசந் தேகம் யாவுஞ்
சிந்தையி னின்று காற்றூற் சிதைவுறு மேகம் போல
நந்துறு மதுவே மிக்க நலமுறு பரவிஞ் ஞானம்.

பூமிசை யெவன்புந் திக்கண் பொருந்துறு மிலேபஞ் சற்றுங்
காமமா திகளா லின்றே காதம்வா தனையி ருந்தும்
பீமமாம் விஷதந் தங்கள் பிடுங்கிடப் படும்பாம் பேபோற்
றேமற மவன்றன் ஞானந் தூய்மைசேர் பரவிஞ் ஞானம்.

ஓதுமெவ் வகையாந் துன்பு மொழிதலு மத்தி யந்தம்
பேதகற் பனையி னாலே பிறங்கிடு பயம னைத்தும்
வீதலும் விஞ்ஞா னத்தின் வியன்பல வீடு மஃதாம்
மீதுகர்த் தவ்வி யங்கள் விட்டுள நிலைய மீதே.

பருதிதா னுதய மாயின் பறந்திடு மிருள்போ லுண்மைச்
சொருபநன் குணர்ந்த பின்னர் துவிதகற் பனைகள் யாவும்
ஒருபொரு ளாகி நில்லா வோங்குமத் துவித ஞானம்
மருவுறின் மனங்கு ளிர்ந்து மாசிலாப் பலனை யெய்தும். (61

அந்தமாம் பொருளா லென்று மச்சமே தன்னின் வேறும்
எந்தவோர் பொருள்தா னிங்கே யெவ்வழி யின்ப நல்கும்
நந்துறு பொருள்க ளாலே நாசமில் பலனெவ் வாறும்
வந்திடு மன்னி யத்தால் மருவுமோ நிர்ப்ப யந்தான்.

எதுவரை பலனின் வேறு யெய்திடு வோரி ருப்பர்
அதுவரை பலன்றன் னோடு மவர்களு மாய்தல் திண்ணம்
அதுலமா மெப்ப யன்றன் அன்னிய மாகு மஃதே
எதுவுமோர் பயமில் வீடென் றிசைப்பன மறைக ளெல்லாம்

பலனுடன் கூட லென்னும் பான்மையே பயத்திற் கேது
சலனமில் பயனெஞ் ஞான்றுந் தன்னிலன் னியமே யாகா
நிலைபெறு ஞாதா வோடு நிகழ்தரு ஞானம் ஞேயம்
பலனுமெப் போழ்தொன் றுமோ பயமில்முத் தியுமப்
போழ்தே.

சத்தைமா த்திரமே யாகத் தனித்துள சொருபந் தன்னைச்
சுத்தமாங் கேள்வி யானுஞ் சோர்விலா மனனத் தானும்
அத்தமுற் றறிய வொண்ணு ஆந்தர மாத லாலே
சித்தநன் னிரோதந் தன்னுற் நிகழுமஃ தறிய லாகும்.

பாதமாந் தன்னுன் மாவைப் பொலியுமீ திவ்வா றென்றே
பேதமா யறிய லாகா பெயர்சடங் களின்வே ருக
நாதசா மான்ய மாக நானிருக் கின்றே னென்றுள்
தநு பவித்தல் வேண்டும் ஈன்றநாட் சேயே போல. (66)

வ்விய சங்கற் பங்கள் கவர்விகற் பங்க ணீங்கி
வ்வமா மூடத் தன்மை யின்றியே சுத்த மான
திவ்விய வான்ம ரூபத் திகழ்ச்சியே ஞான மாகும்
அவ்விய மசல்சித் தத்தே யநுபவித் தறிவர் மேலோர்.

ற்பர ஞானந் தானே சிதைவில்தன் சொரூப மாகப்
பொற்புற விருந்து மிங்கேன் புலப்பட வில்லை யென்னின்
சொற்பமு முன்ப ழக்கஞ் சொரூபத்தி னிலாமை யாலும்
பற்புற வதுநா னென்ன வருமுணர் விலாமை யாலும்.

தன்னிலன் னியமாய் ஞானஞ் சற்றுமிங் கின்மை யாலே
பின்னிய மோகந் தீர்ந்தே பிரத்திய பிஞ்ஞை கொண்டு
ன்னிய வுண்மை தன்னை மருவுக மயல கற்றத்
துன்னிய குருவு நூலுந் துலங்குகா ரணமே யாவர்.

சுழுத்திய ஞேடு முந்துந் துவிதசங் கற்பம் யாவும்
ஒழித்தபி னெளிர்சம் வித்தி ஞேங்கிய வடிவ மொன்றே
வழுத்தமா யறியத் தக்க ஆன்மரூ பந்தா னென்ன
வழுத்துறு குருவு நூலும் வகுத்துரை செய்யா நிற்பர்.

அறிபவ னறிவி னோடே யறிபடு பொருள்கள் பேதம்
உறுமள வுண்மை யாகா வோதிய வவற்றின் பேதம்
அறுவதெப் போதப் போதே யவைகள்தம் மெய்ச்சொ ரூபப
பெறுவன வாகு மீதே பேறெனெக் கூற லாகும். (71

அறிபவன் முதலே யாக அடைவுறு பலன்வ ரைக்கும்
பிறிவற வுண்மை யாகப் பேதமோர் சிறிது மில்லை
பெறுமிவ் காரத் திற்கே பேதகற் பனையாம் பேறென்
றறைதலு மாகா முன்பே யடைவுறப் பட்ட தாலே.

அறியுமிவ் வான்மா வொன்றே யறிவறி பவன்வே றாக
அறிபடு பொருள்க ளோடே யடைபல னென்ன மாயைச்
செறிவினாற் பேத மாகத் தெரிவுறு மதுவ ரைக்குஞ்
செறிதரு சமுசா ரந்தான் றிடமுறு மலைபோ லிங்கே.

சருவபே தகமெம் மட்டோ சமுசார நிலையம் மட்டே
ஒருமையில் பேத மெல்லா மொழிவுறு மக்கா லத்தே
விரிபெருங் காற்றி னாலே வீந்திடு மேக மேபோற்
றெரிதரு சமுசா ரந்தான் சிதைவுறத் திகழும் வீடே.

உண்மைதேர்ந் திடவீட் டின்க ணுற்றெழு முக்க மொன்றே
திண்மைசேர் சாத னந்தான் றிடமுட னெவ்வா றேனும்
ஒண்மையாய்ச் சாதிப் பேனென் றுறுவதே யதன்சொ ரூபம்
வண்மையா யிதனை யன்றி மற்றைச்சா தனங்கள் வீணே.

சறிதரு பௌரு ஷத்தாற் றிசழ்மன வுற்சாகத்தோ
.றுகியவூக்க முற்றோன் எவ்விதத் தினும்வீ டெய்தும்
நெறியுறு புந்திமேவு நின்மலத் தன்மைக் கேற்பச்
றிதுநா ளன்றிப் பன்னாட் சென்றபின் சித்தி சாரும். (76)

த்தமார் திரிதோ டங்கள் செறியுநம் பிக்கை யின்மை
த்தமாங் காமி யத்தின் வாதனை சாட்டி யத்வம்
த்தகைத் தோட முற்றோ ரியற்புரு டார்த்த மற்றே
காத்துற வெந்து சோர்வர் கோரசம் ஸாரத் தாலே.

ான்றிய மோக்க மென்ப துள்ளதோ இலையோ வென்னல்
ன்றசம் ஸயமாம் வீடின் றென்பது விபரீ தந்தான்
தான்றுமிவ் விருவி தத்தாற் றுலங்குநம் பிக்கை யின்மை
ான்றுதோ டத்துள் முன்னாய் முந்திமெய்ப் பலனை
மாய்க்கும்.

ருவுசம் ஸயத்தி னோடு வருவிப ரீதத் தாலுங்
ரமுறு முத்திக் கான செவ்விய வூக்கம் மாயும்
ரவுறு மவற்றி னுக்கு விரோததீர் மானத் தாலே
தரிவுற வவ்வி ரண்டுந் தீர்ந்துநம் பிக்கை யுண்டாம்.

தர்க்கசிந் தனையே மூலங் கொளுமவ நம்பிக் கைக்குச்
தர்க்கமே விடலா லஃது தொலையநம் பிக்கை யின்மைக்
கதிர்த்துள விரோதி யாக வியைந்தநன் னிச்சயத்தோ
கித்திடு சிரத்தை தம்மா லொழிந்திடு மவநம் பிக்கை.

போமசாத் தியத்திற் குக்கம் பொருந்துசாத் தியத்திற் றாலம்
ஆமிச்சை யீதெனக் குண் டாகுக வென்னத் தோன்றும்
காமவா தனையா மஃதே காரணங் குரோதா திக்கும்
தாமது நசிக்கு மாகிற் சகலவா தனையுந் தீரும். (81)

காமியங் களிலே மிக்க கருத்துவைத் துள்ளோன் நெஞ்சந்
தோமுறு மவற்றை யென்றுஞ் சூழ்தர லாலே மேலோர்
தாமொழிந் ததையுங் சேளான் தனக்குமுன் னிருப்ப தோரான்
ஆமவன் சிரவ ணஞ்செய் தாலுமே செய்யா தாகும்.

காமவா தனையை நீக்கக் கவின்பெறு விராகம் வேண்டும்
தோமுறு திரிசி யத்தின் றோடமோர் திருட்டி தானே
ஏமமாம் விராகத் திற்கிங் கேதுவா மிதனைப் பற்றி
ஆமலி யிரண்டாந் தோட மாகிய வதனைத் தீர்க்க.

புகலுமூன் றுவ தான புத்தியின் மந்தத் தன்மை
மகிழ்தரு சிரவ ணத்தால் வருபய னெய்தி டாமற்
றகைசெயும் மேலா மூக்கஞ் சார்ந்துளோ னப்பி யாசம்
மிகவுமே செயினு மஃது வென்றிடப் படாத தேயாம்.

ஆன்மதே வதையா மென்னை யகமுற வுபாசித் தன்றி
மான்மிகு சாட்டி யத்தின் வலிதனை யழிக்க வொண்ணு
தான்முய வுபாச னத்தின் தாரதம் மியத்திற் கேற்ப
யான்விலக் கிடுவ னென்றும் யாண்டுமத் தோடந் தன்னை.

சகத்துளோர் புந்தி விர்த்தி தமையெலாம் நடத்து மென்னை
அகத்தினிற் கபட மின்றி யநவர தஞ்சே விக்கும்
மிகுத்துள பத்தி யாலே மேலுள சாத னங்கள்
தகப்புலன் றருத லாற்சா தனத்தின்சா தகமு மீதே. (86)

அமலையீஸ் வரியா மென்னை யநாதரஞ் செய்து தானே
சமதையி னலே வேறு சாதனங் களைச்செய் வோனே
அமர்செயும் விக்கினங்க ளடிக்கடி யெய்திச் சோர்வன்
சமமிலா வெனது பக்தன் சாதக சிரேட்ட னவன்.

ஆன்மநிச் சயமும் தேகத் தனன்மபா வனையுஞ் சித்தி
ஊன்மிகு முடலில் யார்க்கு முள்ளதா மான்ம புத்தி
மான்மிகு மிப்பா வந்தான் மாய்தலே மூட மற்றுத்
தான்மிளிர் சித்தி யென்னச் சாற்றிடும் மறைகள் யாவும்.

சரீரமா தியைவி ளக்குந் தனித்தசித் துருவே நானென்
றிராநிகர் சந்தே கங்கள் யாவையும் நாசஞ் செய்து
விராவுநிச் சயமே சித்தி மெய்யையா னெனுமெண் ணந்தான்
பராவிய வஞ்ஞர் யார்க்கும் படர்பெருந் துன்பஞ் செய்யும்.

ஆன்மசித் தியையொ ழிந்தே யட்டமா சித்தி யாதி
பான்மைய வனைத்து மஃதிற் பதினறு கலையி லொன்றும்
மேன்மையு மடையா மற்றும் விரிதரு கால தேசத்
தான்மிகு பரிச்சின் னத்தைச் சார்தலாற் பயனு மாகா.

மிளிர்சிவாத் திகையு மான்ம வித்தையு மாமிச் சித்தி
விளிபரிச் சின்ன மாகா வேறுசித் திகள னைத்தும்
அளிமிகு மான்ம வித்தைக் காயசா தனத்த டங்கி (91)
யொளியறு மவையவ் வித்தைக் குற்றவிக் கினங்க ளேயாம்.

பிரமலோ கமுந்து ரும்பாப் பிறங்குமென் றுணர்மு மூட்சு
வர்தமக் கிந்த்ர சால வகைநிக ரனுன்ம சித்தித்
திரள்களாற் பயனென் வீணே திரிந்துகா லங்க டத்தக்
கரணமா மாதலாலே கருதிடத் தக்க தன்றாம்.

எந்தவொன் றுற்சோ கங்க ளெவையுமே நசித்துப் போகும்
உந்துறு பரமா னந்த மொரேவித மாயி லங்கும்
சந்ததங் கால பாசந் தான்வரா தொழிந்து மாயும்
அந்தவொன் றேவிஞ் ஞான வான்மநற் சித்தி யாமே.

தொந்ததே கத்தின் வேறுஞ் சுத்தசித் தேகா னென்னும்
விநதையாம் பிரத்தி யட்ச விமர்சன ஞான சித்தி
புந்திநின் மலத்தி னாலும் பொருந்துமப் யாசத் தாலும்
வந்திடு குறைவேற் றத்தால் வயங்குமு விதமே யாக.

திலகமே தாவி வேதாத் யயனத்து ணிரோத மற்றும்
பலசெயல் புரிந்தும் வர்ணம் பயில்சுரம் தவறு தேபோற்
பலவிவ காரஞ் செய்தும் படர்மனோ நிரோத மின்றித்
திலகவான் மாநு பூதி திகழ்ந்திட லுத்த மங்காண்.

அடர்விவ கார மின்றே லகநிரோ தம்வேண் டாது
படனஞ்செய் பவரே போலப் பயில்விவ கார மின்றேல்
தொடர்மன நிரோத மின்றித் தூயவிஞ் ஞான சித்தி
இடமுற மேவுந் தன்மை யியம்புமத் திமமே யாகும். (96)

உயர்விவ கார மற்று முண்ணிரோ தத்தோ டோதிற்
றவருதும் நிரோத மின்றேற் றவறியும் வேத மோது
பவரெனச் சுவா நு பூதி பகர்நிரோ தத்தா லுற்றும்
அவிர்மன நிரோத மின்றே லற்றுமே யதம மாகும்.

இவற்றினு ளுத்த மந்தா னெழின்ஞான சித்தி யின்கண்
நிவப்புறு பராகாஷ் டைப்பேர் நிலையதே கனுவின் முன்னுப்
பவித்ததா னும வத்தைப் பதவிசா ரக்ஷ ணத்திற்
கவிப்புறு நிலைநி கர்ப்பக் கருதிடப் படுவ தாமே.

அருவிவ காரத் திற்று னுகவா தனைகி ளம்பிப்
பரவிடா தேமு யற்சி பற்றிவா தனையெ ழும்பிப்
பிரவிர்த்தி யுறலுமான்மப் பிரகாசம் முயற்சி யின்றித்
திரமுற விளங்க லுந்தான் றிகழ்பரா காஷ்டை யாமே.

விவகார பரனுய் நின்று மிளிர்திரி சியத்தைப் பார்க்கும்
அவிர்தொய்தத் தோற்ற மேவா ததும்நனு வாதி யின்கண்
விவகாரஞ் செய்த போதும் மிகவுறங் கினன்போ லாகி
அவிர்தலும் பராகாஷ் டைப்பே ருநிலை யாகு மன்றே

எவ்விவ காரஞ் செய்து மெழிற்சமா தியைவி டாதே
ஒவ்வுதன் னநுபத்தா லொளிர்வுறு தனக்குள் ளாகத்
துவ்வுபல் வகைய ஞானி சொரூபநன் குணர்ந்தி ருக்கும்
இவ்வித சித்தி பெற்றோ னேசித்த வுத்த மன்காண். (101)

இச்சையே னுஞ்சந் தேக மேனுமோர் சிறிது மின்றி
நிச்சலும் விவசா ரத்தே நிர்ப்பய னாகி நின்று
மிச்சையெவ் வகைய வான விவகார மின்பு துன்பும்
சொச்சமாந் தனக்குட் கான்போன் றாயசித் தோத்த
மன்றான்.

இனத்துறு பெத்தர் முத்தர் யாரையுஞ் சர்வான் மாவாத்
தனக்குளே கண்டும் பந்த சாலமெப் போதும் யாவுந்
தனக்குவே றென்ன தோர்ந்துந் தனித்தொரு காலும்
வீட்டை
இனத்துற வேண்டா தோனே யெதிரில்சித் தோத்த மன்காண்.

பிசிப்பல கோடிபேதப் பிராரத்தத் துடன வற்றின்
விசித்திரப் பலன்க ளாலும் விளங்குதன் னிலைமா றுமல்
அசைத்தவா பத்துக் கூட்டத் தாலதை ரியப்ப டாமல்
நிசத்தனி நிலையி னிற்போன் றேயசித் தோத்த மன்காண்

அதிசயத் தினில்வி யப்பும் அதிசுகந் தனிற்க ளிப்பும்
எதிர்வுறு துள்ளே சாந்த மெய்தியே வெளியில் ஞால
மதியினர் போலி ருந்து வயங்குசித் தோத்த மற்கும்
திதிதரு மெனக்கும் பேதஞ் சிறிதுமின் றவனே நானே.

இருடிகா ளுமது கேள்வி யெவைக்குமுத் தரம ளித்தேன்
கருணையால் யானு ரைத்த கருத்தையுட் கொண்டு நன்கே
தெருளினை யடைவீ ரென்று திரிபுரை வித்யா தேவி
அருளியே அந்தர்த் தான மடைந்தன ளறிபிராமா. (106)

இவ்வகை முனிவோர் யாரு மினிதுகேட் டுளந்தெ ளிந்தே
எவ்வமில் சிவன்முன் னோரை யிறைஞ்சியே தம்மிருப்பைச்
செவ்வி தினடைந்தா ரென்று சிறந்ததத் தாத்தி ரேயர்
திவ்விய பரசு ராமன் சிந்தையுண் மகிழ நோக்கி.

பார்க்கவா யான்மொ ழிந்த பரமமாம் வித்யா கீதை
தீர்க்கமாய்ச் சிரவ ணித்தாற் சிதைவுறும் பாவம் யாவும்
ஏர்பட விசாரித் துள்ளே சேர்த்திடிற் றன்ன தான்ம
பூர்த்திசாம் பிராச்சி யத்தைப் பொருந்துவ ரென்றே
பின்னும்.

வித்தியா கீதை யீது மேன்மையாம் நேரே யந்த
வித்திபா தேவி தன்னால் விளம்பிடப் படலால் நன்கே
நித்தமு மிதைப்ப டிப்போர் நிகழ்பவ பாசம் நீங்கி
சித்தமாம் ஞான மெய்தல் நிச்சய மென்று ரைத்தார்.

புகழ்வுறு மெவைக்கு மான்ம பூதமா மெதனை யோர்ந்து
நிகழப ரோட்ச மாகத் தெளிவுற வநுப விப்பின்
இகலறு முத்தி யோவகி தின்றெனிற் பந்த மாமோ
திகழ்திரி புரைது ரீய நிலைபது வேஹரீ மாமே.

எவள்குரு வடிவ மாக விருந்துகொண் டடியார் தம்மைத்
தவழ்சமு சார வாரி தன்னினின் றுத்த ரிப்பள்
சவணசி மதியுஞ் சர்வ சாக்ஷிணி தானு மாமங்
நவபரா சத்திமாத நனிவிளங் குகவெங் நாளும். (111)

மகிழ்சிவ பெருமா னேபார் வதிதேவி விக்கி னேசன்
சுகமருள் சுப்ர மண்ய சுவாமிநா ராய ணன்றான்
தகவுறு மிலட்சுமி த்தாய் சரஸ்வதி யம்மை யாசான்
திகழ்வடி வுடனேங் குஞ்சச் சிதானந்தப் பிரமம் வாழ்க.

சீத ஞானத் திரிபுரை வித்தியா
கீதை வாழ்க கிருபை யுடனதை
யோது வார்க ளுணர்வொடும் வாழ்கவிப்
பூத லத்தவர் பொற்புற வாழ்கவே.

திரிபுர சுந்தரி தேவியிரு
பரிபுர முந்து பதந்துணையே.

முற்றிற்று.

பிரிட்டிஷ்

இந்தியா பிரஸ்

கரூர்.